வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்டம் இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் பின்வரும் பதவிகளுக்காக இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பதவி -

1. சந்தைப்படுத்தல் முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
2. வணிக முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
3. உள்ளக கணக்காய்வாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
4. சட்ட அலுவலர் (ஒப்பந்த அடிப்படையில்)

1. சந்தைப்படுத்தல் முகாமையாளர் - (ஒப்பந்த அடிப்படையில்) பதவிகள் - 01

தகைமைகள்:

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் / வணிக மேலாண்மை / சந்தைப்படுத்தல் துறையில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

- முதல் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் தொடர்புடைய துறையில் தகைமை பெற்ற குறைந்தபட்சம் ஒரு (01) வருடப் பிந்திய அனுபவம்.

அல்லது

- வணிகம் / வணிக மேலாண்மை / சந்தைப்படுத்தல் துறையில் முகாமைத்துவம், தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி நிலை 7 இற்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

- அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டபூர்வமான சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனம் ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடப் பிந்திய அனுபவம்.

2. வணிக முகாமையாளர் - (ஒப்பந்த அடிப்படையில்) பதவிகள் - 01

தகைமைகள்:

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம் / வணிக மேலாண்மை / சந்தைப்படுத்தல் துறையில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

- முதல் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் தொடர்புடைய துறையில் தகைமை பெற்ற குறைந்தபட்சம் ஒரு (01) வருடப் பிந்திய அனுபவம்.

அல்லது

- வணிகம் / வணிக மேலாண்மை / சந்தைப்படுத்தல் துறையில் முகாமைத்துவம், தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி நிலை 7 இற்குக் குறையாத திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

- அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டபூர்வமான சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனம் ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடப் பிந்திய அனுபவம்.

3. உள்ளக கணக்காய்வாளர் (ஒப்பந்த அடிப்படையில்) - பதவிகள் - 01

தகைமைகள்:

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ நிதி மேலாண்மை / வணிகப் பட்டம்.

அல்லது

- பாடமானது பதவிக்குத் தொடர்புடையதாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

உடன்

- தகைமை பெற்றதன் பின்னர் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடப் பிந்திய அனுபவம்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் தலைவருக்குப் பொறுப்பானவர், நிதி நடவடிக்கைகளின் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பில் பங்குபற்றுதல், நிதி நடவடிக்கைகளின் தொடர்ச்சியான சுயாதீன மதிப்பீட்டை மேற்கொள்ளுதல், பிழைகளைக் கண்டறிதல், பிழை கண்டறிதல் மற்றும் கணக்கியல் குறைப்பாடுகள், பிழைகள் திருத்தம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், விசேட விசாரணை, ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளுக்கு உதவுதல், தலைவருக்கு அறிக்கை சமர்ப்பித்தல், பராமரிப்பு பதிவுகள், அறிக்கைகள் தயாரித்தல், கீழ்நிலை ஊழியர்களை வழிநடத்துதல் மற்றும் செயற்பாடுகளை எளிதாக்குவதற்கான பிற பொறுப்புகள்.

4. சட்ட அலுவலர் (ஒப்பந்த அடிப்படையில்) - பதவிகள் - 01

தகைமைகள்:

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தில் இளமாணிப் பட்டம் (LL.B). உடன் சட்டத்தரணி

மற்றும்

- அரசு/திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனத்தில் முதல் பட்டம் பெற்ற பிறகு தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருடப் பிந்திய அனுபவம்.
- தங்கள் நிறுவனத்திற்குள்ளேயுள்ள அனைத்து சட்ட விவகாரங்களையும் கண்காணித்தல், உள் மற்றும் வெளி சட்ட விவகாரங்களைக் கையாளுதல் மற்றும் நிறுவனத்தை சட்ட சிக்கல்களில் இருந்து விலக்கி வைக்க தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்தையும் செய்வதற்குப் பொறுப்பாக இருத்தல்.
    - சட்ட ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் சட்டப் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைக்கு ஆதரவளித்தல்
    - சட்ட ஆவணங்களை வரைதல் மற்றும் நிறுவனத்தின் சார்பில் நீதிமன்றங்களில் ஆஜராகுதல்
    - அனைத்து சட்டப் பணிகளையும் கையாளுதல்

பொது நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி: இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும்.
2. ஒப்பந்தச் சம்பளம்: ரூ. 99510/= (MM -1-1) (அனைத்தும் அடங்கும்).
3. வயது: வயது 22 ஆண்டுகளுக்குக் குறையாமலும், 45 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது.
4. அரச துறையில் உள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.
5. சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் இரண்டு நடுவர்களின் (தொடர்பில்லாதவர்கள்) பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் கூடிய சுயவிவரங்கள் (Bio-data) கீழே உள்ள முகவரிக்கு 2026 டிசம்பர் 07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6. பணியமர்த்தப்பட்ட பிறகு, செயல் திறன் KPI மூலம் அளவிடப்படும்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்,
இலக்கம் 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10.